**எஸ்.டி.சி .எண். 990/2023 நாள்– 04.05.2026 பக்கம் 644/2023**

**ம.சா .1. முத்துசுப்பிரமணியன் த/பெ.லட்சுமிநாராயணன்**

**எதிரி ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுசபடி மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.**

**C.M.P 3221/2025 கடந்த 19.01.2026 அன்று மனு அனுமதிக்கப்பட்டு எதிரிதரப்பில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை.**

கைமாற்றுக்கடனுக்கு பொதுவாக வட்டித்தொகை நிர்ணயம் செய்வது இல்லை என்றால் வாய்மொழியாக வட்டித்தொகை குறித்து நிர்ணயம் செய்து கொள்வார்கள். நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் ரூ.4 லட்சம் கடன் பெற்றார். அதற்கு வட்டிதொகை ஏதும் நிர்ணயம் செய்யவில்லை. இவ்வழக்கு காசோலையை எவ்வளவு தொகைக்கு எதிரி என்னிடம் கொடுத்தார் என்றால் 4,20,000/–க்கு கொடுத்தார்.

இவ்வழக்கு காசோலை ம.சா.1 எதிரியின் கையெழுத்து ஒரு மையினாலும், அதில் உள்ள மற்ற வாசகங்கள் வேறு மையினாலும் உள்ளது என்றால் சரிதான். ம.சா.1 காசோலை கூட்டு கணக்கில் கூறிய காசோலை என்றால் சரிதான். அந்த விபரத்தை இவ்வழக்கு ஆவணங்களில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அவசியம் இல்லை என்பதால் அதனை நான் குறிப்பிடவில்லை. எதிரி என்னிடம் கடந்த 2018 ஆம் ஆண்டு ரூபாய் 2 லட்சம் கடனாக பெற்று அதனை திருப்பி செலுத்திவிட்டார் என்றாலும்,

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**

அதற்கு ஆதரவாக கொடுக்கப்பட்ட காசோலை தான் இவ்வழக்கு காசோலை என்றாலும், மேற்படி கடன் தீர்ந்த பிறகும் காசோலையை எதிரியிடம் கொடுக்காமல் வைத்திருந்து பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும், இவ்வழக்கு கடன் தொகைக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. நான் சொல்வது போல் எதிரி என்னிடம் ரூபாய் 4 லட்சம் கடன் பெறவில்லை என்றாலும், அதற்கு ஆதரவாக இவ்வழக்கு காசோலையை கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. எதிரி வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்
**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**